
# திராவிடத்தால் வாழ்கிறோம்

979

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# உடன்பிறப்பே

**நீரை.மகேந்திரன்**

130

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த மாரி அய்யா அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.

## மாரி அய்யா; கந்தர்வகோட்டை கட்டபொம்மன்!

1996-ஆம் ஆண்டு, புதுக்கோட்டை தொகுதியில் வெற்றிபெற்ற பெரியண்ணன் அவர்கள், ஒருசில மாதங்களிலேயே மறைந்துவிட்ட காரணத்தால், அந்தத் தொகுதிக்கு இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டது. அதற்கு முந்தைய ஆட்சியின் ஊழல் வழக்குகள் மீது கழக அரசு தீவிரமான நடவடிக்கைகள் எடுத்துவந்த நிலையில், அந்த நடவடிக்கைகள் சரியா, தவறா என்பதை பொதுமக்கள் முடிவுசெய்யும் தேர்தலாக அந்த இடைத்தேர்தல் அமையும் என ஊடகங்கள் எழுதின.

கழக அரசு பொறுப்பேற்ற பின்னர் நடைபெறும் முதல் இடைத்தேர்தல் என்பதால், அந்தத் தேர்தல் மக்களால் மிகவும் எதிர்பார்க்கப்பட்டது. அந்த எதிர்பார்ப்புகளை நிறைவுசெய்யும் வகையில், கழகத் தலைவர் கலைஞர் நிறுத்திய வேட்பாளர் மாரி அய்யா. அப்போது, கந்தர்வகோட்டை ஒன்றியச் செயலாளர்.

கலைஞரின் தேர்தல் பிரச்சாரம், கழகத்தினர் மீது மக்கள் வைத்த நம்பிக்கை ஆகியவை மாரி அய்யாவை வெற்றிபெற வைத்தன. அந்த இடைத்தேர்தல் வெற்றி, கழக ஆட்சிக்கு மக்கள் அளித்த 'நற்சான்று, அங்கீகாரம்' எனப் பத்திரிகைகள் எழுதின. அந்தப் பாராட்டுகள் மாரி அய்யாவின் கழகப் பணிக்கும் சேரும் என கலைஞர் அறிவார். அந்த வாய்ப்பு, கழகத்தால் தனக்கு என்ன லாபம் என்று கருதாமல், தன்னால் கழகத்துக்கு என்ன லாபம் என்று கருதிச் செயல்பட்டதால் வந்தது என மாரி அய்யாவும் அறிவார். அவர், பச்சை சால்வை அணிந்து வலம் வந்த, **'கந்தர்வகோட்டை கட்டபொம்மன்'** என்பது கலைஞர் அளித்த கம்பீரமான அடையாளம்.

### கந்தர்வகோட்டை கழகக் கோட்டை

1940-ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 14-ஆம் தேதி பிறந்தவர் மாரி அய்யா. அன்றைய ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டம், இன்றைய புதுக்கோட்டை மாவட்டம். கந்தர்வகோட்டை அருகில் உள்ள கோமாபுரம் என்கிற சிற்றூரில் பிறந்தவர் மாரி அய்யா. பெற்றோர் பேச்சி அய்யா - அம்மாளு அம்மாள். தொடக்கக் கல்வியை தஞ்சை அருகில் உள்ள வல்லம், கந்தர்வகோட்டை ஆகிய ஊர்களில் படித்தவர், திராவிட இயக்க அரசியல் ஈர்ப்புகொண்டு பயணிக்கலானார். பின்னர், 1958-ஆம் ஆண்டு கழகத்தில் இணைந்து பணியாற்றத் தொடங்கினார். 1965-ஆம் ஆண்டில் கோமாபுரம் ஊராட்சி மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தொடர்ச்சியாக 4 முறை அந்தப் பொறுப்பில் இருந்தவர். அவரது மக்கள் செல்வாக்கும், கழக செல்வாக்கும் அப்பகுதியில் பெரும் நம்பிக்கை அளித்தவை. அது, புதுக்கோட்டை தொகுதி நாடாளுமன்ற வாக்குகள் எண்ணப்படும்போது, கந்தர்வகோட்டை வாக்குகள் கை கொடுக்கும் என்கிற நம்பிக்கையைத் அளித்தவை.

அன்றைய தஞ்சை மாவட்ட கழகத்தின், ஒரத்தநாடு வட்டக் கிளையில், மாவட்டப் பிரதிநிதியாகத் தொடங்கிய கழகப் பணி, படிப்படியாக மாவட்ட அவைத்தலைவர் வரை பொறுப்புகளைக் கொண்டுவந்தது. 1974-ஆம் ஆண்டில் புதுக்கோட்டை மாவட்டம் உதயமான பின்னர், கந்தர்வகோட்டை ஒன்றிய கழகச் செயலாளராகத் தேர்வானார்.




தொடர்ந்து 40 ஆண்டுகாலம் 2014-ஆம் ஆண்டு வரை அந்தப் பொறுப்பில் இருந்தவர். கழகத்தின் 13-வது உட்கட்சித் தேர்தலில் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும், 14-வது உட்கட்சித் தேர்தலில் மாவட்ட அவைத் தலைவராகவும் தேர்வு செய்யப்பட்டு பணியாற்றிவந்தார். கந்தர்வகோட்டை வட்டத்தின் கூட்டுறவு சங்கத் தலைவராக இரண்டு முறை தேர்வுசெய்யப்பட்டார். விராலிப்பட்டி கூட்டுறவு சங்கத் தலைவராகவும் பொறுப்பு வகித்துள்ளார்.

### சுயமரியாதைக்காரர்!

கழகப் பொறுப்புகளிலும், மக்கள் பொறுப்புகளிலும் அவரது அணுகுமுறைகள் சமூகநீதிப் பாதைக்கு மாறாக இருந்ததில்லை என்கின்றனர் கழகத்தினர்.

1978-ஆம் ஆண்டு கோமாபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையில் அன்பிலார், மன்னை ஆகியோர் முன்னிலையில் சுயமரியாதைத் திருமணம் செய்துகொண்டவர். குறிப்பாக, கிராமப் புறங்களில் சாதி ஆதிக்கம் தீவிரமாக இருந்த காலத்தில், சுயமரியாதைத் திருமணமும், தனது மணவிழாவில் அனைத்து சமூகத்தினர் சேர்ந்து அமரும் வகையில், சமபந்தியும் நடத்தியது பெரும் புரட்சியாக இருந்தது.

கோமாபுரத்தில், தாழ்வான பகுதியில் இருந்த பட்டியலின சமூகத்தினர் குடியிருப்புப் பகுதி, மழை வெள்ளக் காலங்களில் பெரும் பாதிப்பினைச் சந்தித்துவந்த நிலையில், அதை மாற்றியவர் மாரி அய்யா. கிராமத்தின் மேடான சாலைப் பகுதியிலேயே மாற்றுச் சமூகத்தினருக்கு இணையாக 'அண்ணா நகர்' குடியிருப்பினை நிறுவி, பட்டியலின மக்களை அங்கு குடியமர்த்தினார்.

> “இவரோடு கழகப் பணியாற்றிய பலர் அணி மாறியபோதும், கழகப் பணிகளில் உறுதி காட்டியவர். அவரது உறுதிதான், 1997-ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினராகும் வாய்ப்பினைக் கொண்டுவந்தது!”

### மாறாத மனம் கொண்டவர்

கழகத்தின் அனைத்துப் போராட்டங்களிலும் தீவிரமாக ஈடுபட்டவர். இந்தி திணிப்புக்கு எதிரான போராட்டம், சட்ட நகல் எரிப்புப் போராட்டம், ஈழத் தமிழர் ஆதரவுப் போராட்டம் எனக் கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்துகொண்டு சிறை சென்றார். மிசா நெருக்கடி காலத்தில் பல மாதங்கள் தலைமறைவாக இருந்து அரசியல் செய்தவர்.

மாவட்டக் கழக முன்னோடிகள் பெரியண்ணன், காடுவெட்டி தியாகராசன், வடகாடு நல்லத்தம்பி, கீரை.தமிழ்ச்செல்வன் ஆகியோரோடு நல்ல நட்பும், தோழமையும் கொண்டு இயங்கியவர். 1996-ஆம் ஆண்டில், இன்றைய கழக துணைப் பொதுச்செயலாளர் திருச்சி சிவா அவர்கள் புதுக்கோட்டை மக்களவைத் தொகுதியில் போட்டியிட்டபோது, அவரது வெற்றிக்காக அயராது உழைத்தவர்.

திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகள் மீதும், கழகத்தின் மீதும், கலைஞர் மீதும் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருந்தார். “துரோகச் சிந்தனை கொஞ்சமும் இல்லாத மனிதராக இருந்தவர் மாரி அய்யா” என கலைஞர் பலமுறை பாராட்டி இருக்கிறார்.

1972-ஆம் ஆண்டு கட்சிப் பிளவின்போது, ஒரத்தநாடு வட்டக் கழகச் செயலாளர் உள்பட பலர் அணி மாறியபோது, இவரது பெயரையும் சேர்த்து கட்சியில் இருந்து விலகியோர் பட்டியல் வெளியிட்டுள்ளனர். அதற்கு எதிராகக் கொதித்தெழுந்து, தனியாக மறுப்பு அறிக்கை விட்டு, தலைமைக் கழகம் வந்து, வட்டக் கழக நிலைமையை எடுத்து வைத்தார். அதுபோல, 1993-ஆம் ஆண்டிலும் இவரோடு கழகப் பணியாற்றிய பலர் அணி மாறியபோதும், கழகப் பணிகளில் உறுதி காட்டியவர். அவரது உறுதிதான், 1997-ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினராகும் வாய்ப்பினைக் கொண்டுவந்தது.

எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் பணியாற்றும் பழக்கம் கொண்டவர். சட்டமன்றப் பணிக்குப் பின்னர், 2006-ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் கந்தர்வகோட்டை உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிட்டு ஒன்றியப் பெருந்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்த ஐந்தாண்டுக் காலமும் மக்கள் சேவை ஆற்றுவதில் சளைக்காத உழைப்பாளராக இருந்தார்.

மாரி அய்யா, கடந்த 2020-ஆம் ஆண்டு ஜூலை 25-ஆம் தேதி, கொரோனா பெருந்தொற்று காலத்தில் உடல்நலம் பாதிக்கப்பட்டு மறைவு எய்தினார். இணையம் வழியாக நடைபெற்ற படத்திறப்பு நிகழ்ச்சியில், இன்றைய கழகத்தலைவர் அவர்கள் நீண்ட உரையாற்றி, மாரி அய்யா அவர்களின் பெருமைகளைப் பறைசாற்றினார்.

“எத்தகைய சோதனைக் காலமாக இருந்தாலும் கழகத்துக்காகப் பாடுபட்ட - உழைத்த - தொண்டு செய்த தளகர்த்தர்களைக் கழகம் எந்நாளும் மறக்காது” என அன்று, கழகத் தலைவர் ஆற்றிய உரையே கழகத்தின் கல்வெட்டு!

...துடிக்கும்

## அரசியலமைப்பை அவமதிக்கும் நரேந்திர மோடி!

ஆர்.எஸ்.எஸ். நூற்றாண்டுக் கொண்டாட்டத்தை ஒட்டி, 100 ரூபாய் சிறப்பு நாணயத்தை, பிரதமர் மோடி வெளியிட்டுள்ளார். அதன் ஒருபுறம் தேசியச் சின்னம், மறுபுறம் பாரத மாதா சிங்கத்தின் மீது அமர்ந்திருப்பதுபோலவும், ஆர்.எஸ்.எஸ். தொண்டர்கள் பாரத மாதாவை வணங்குவது போலவும் உள்ளது. இது மதச்சார்பின்மைமீது நம்பிக்கை கொண்ட அனைவரையும் அதிர்ச்சி அடையச் செய்துள்ளது. பாரத மாதா உருவம் பொறித்த சிறப்பு நாணயங்கள், சுதந்திர இந்தியாவில் இதுவரை யாருக்கும் வெளியிடப்பட்டதில்லை.

ஆனால், சுதந்திரப் போராட்டத்தில் எந்தப் பங்கும் வகிக்காத ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்கு, அதுவும் காந்தியடிகள் பிறந்தநாள்–காமராசர் நினைவு நாளுக்கு முன்பாக, இப்படியொரு நாணயத்தை பிரதமர் மோடி வெளியிட்டது உள்நோக்கம் கொண்டது என விமர்சனங்கள் எழுந்திருக்கின்றன. இதுதொடர்பாகக் கண்டனம் தெரிவித்துள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், “நம் தேசப்பிதாவைக் கொன்றொழித்த மதவாதியின் கனவுகளுக்குச் செயல்வடிவம் கொடுக்கும் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் நூற்றாண்டுக்கு, நாட்டின் தலைமைப் பொறுப்பில் இருப்பவரே அஞ்சல்தலையும் நினைவு நாணயமும் வெளியிடும் அவல நிலையில் இருந்து, இந்தியாவை மீட்க வேண்டும்” எனத் தெரிவித்துள்ளார்.

அதேபோல கேரள முதலமைச்சர் பினராயி விஜயன், “ஆர்.எஸ்.எஸ். இயக்க நினைவு நாணயத்தை வெளியிட்டது அரசியலமைப்புச் சட்டத்தை அவமதிக்கும் செயல். விடுதலைப் போராட்டத்திலிருந்து விலகிய ஒரு அமைப்புக்கு அங்கீகாரம் அளிக்கும் முயற்சி” எனச் சாடியுள்ளார். “நாட்டைப் பிளவுபடுத்தும் ஓர் அமைப்பான ஆர்.எஸ்.எஸ். சுதந்திரத்தின்போது, அதன் தலைவர்கள் சிறைக்குச் செல்லவில்லை, ஆங்கிலேயர்களால் தடை செய்யப்படவில்லை. ஆனால், அந்த அமைப்புக்கு பாரத மாதா உருவம் பதித்த நாணயமா?” என காங்கிரஸ் கட்சி சாடியுள்ளது.

## ஃப்ளாஷ்பேக்



தமிழ் இராஜேந்திரன்



### காலத்தைத் திரும்பிப் பார்க்கவைக்கும் படம்!

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் கழக நிகழ்ச்சிகளுக்காக சேலம் வந்திருந்தபோது, எனது நண்பர் சேலம், மகுடஞ்சாவடி கந்தசாமி உள்பட கழக நிர்வாகிகள் தலைவருடன் எடுத்துக்கொண்ட படம். அன்றைய மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் வீரபாண்டி ஆறுமுகம் அவர்களின் ஏற்பாட்டில், இந்த சந்திப்பு நடைபெற்றது. கழகப் பற்றாளராக இந்தப் படத்தைத் திரும்பிப் பார்க்கையில், காலத்தைத் திரும்பிப் பார்ப்பதுபோல உள்ளது.

**– தமிழ் இராஜேந்திரன், வழக்கறிஞர்,**
**செயலாளர், கரூர் தமிழ்ச் சங்கம், கரூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### பாளைச் சிறையிலே கலைஞர்!

1965-ஆம் ஆண்டு பிப்ரவரியில், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை 'தமிழ்நாடு மாணவர் இந்தி ஆதிக்க எதிர்ப்புக் குழு' கூடி போராட்டத்தை ஒத்திவைக்க முடிவுசெய்தது. அதையடுத்து, 16 - ஆம் தேதி 'இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ், கலைஞர் கைது செய்யப்பட்டார். அவரை மட்டும் போலீஸ் வேனில் ஏற்றி, பழம்பெருமை மிக்க - வரலாற்றுப் புகழ் வாய்ந்த பாளையங்கோட்டை 'பார்ஸ்டல்' (சிறுவர் பள்ளி) சிறைச் சாலையில் அடைத்தனர்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.